செயற் பொறியாளர் (வே.பொ.) (பொ.), திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திரு.சி.கிருஷ்ணமூர்த்தி, பி.இ.(விவ.)., எம்.பி.ஏ., எம்.சி.ஏ.,

ந.க.எண். அ/2578/2022 நாள்: 16.06.2022

பொருள்: பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருமதி.உ.குருவம்மாள், இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) - பதவி உயர்வில் பணியேற்றுக் கொண்டது - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. தலைமைப் பொறியாளர் (வே.பொ.) சென்னை, அவர்களின் செயல்முறை ஆணை எண். அப2/20124/2020 நாள் 18.08.2020
2. செயற் பொறியாளர் (வே.பொ.), திருநெல்வேலி, அவர்களின் செயல்முறை ஆணை எண். அ/2262/2020 நாள்: 28.08.2020
3. உதவி செயற் பொறியாளர் (வே.பொ.), திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண். அ/1169/2022, நாள் 10.05.2022

------

பார்வை (1)-ல் காணும் தலைமைப் பொறியாளர் (வே.பொ.), சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின் படி, இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) ஆகப் பதவி உயர்வில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.உ.குருவம்மாள் அவர்கள் பார்வை (2)-ல் காணும் செயற் பொறியாளர் (வே.பொ.), திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணையின் படி இளநிலை உதவியாளராக உதவி செயற் பொறியாளர் (வே.பொ.), திருநெல்வேலி அலுவலகத்திற்கு நியமனம் செய்து உத்தரவிடப்பட்டு 02.09.2020 முற்பகல் இளநிலை உதவியாளர் ஆக பணிபுரிந்து வருகின்றார்.

பார்வை (3)-ல் காணும் உதவி செயற் பொறியாளர் (வே.பொ.), திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் உதவி செயற் பொறியாளர் (வே.பொ.), திருநெல்வேலி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.உ.குருவம்மாள் அவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 02.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்திட வேண்டி கருத்துரு பெறப்பட்டுள்ளது.

எனவே உதவி செயற் பொறியாளர் (வே.பொ.), திருநெல்வேலி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.உ.குருவம்மாள் அவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அரசுப்பணியில் சேர்ந்த நாளான 02.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

செயற் பொறியாளர் (வே.பொ) (பொ.),
திருநெல்வேலி.

பெறுநர்
திருமதி.உ.குருவம்மாள்,
இளநிலை உதவியாளர்.

மூலம் மற்றும் நகல்: உதவி செயற் பொறியாளர் (வே.பொ.), திருநெல்வேலி.
- இத்துடன் பணிப்பதிவேடு ஒரு பவுண்டு தொகுதி மற்றும் பதிவுறுத்தாள் 5 தாட்கள் இணைத்தனுப்பப்படுகிறது. அதனை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அளித்திடவும் பணிப்பதிவேட்டில் மேற்படி விபரத்தினை பதிவு செய்து தெரிவித்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல்: பணிப்பதிவேடு
நகல்: இருப்புகோப்பு